**DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KADALADI**
**OS No. 12/2019**

**2024** ம் வருடம் அக்டோபர் திங்கள் 15 ம் நாள் வாதி தரப்பில் 1 வது சாட்சியத்தின் வாக்குமூலம் 1873 ம் ஆண்டு 10 வது விதியின் படி திரு.S.சேதுராணி, உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

பெயர் : பாண்டியம்மாள் (PW1) கிராமம் :

தந்தை / கணவர் பெயர் : தொழில் :

வயது :

<u>வாதி தரப்பில் முதன்மை விசாரணை</u>:

1. நான் இவ்வழக்கின் வாதி ஆவேன். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் கண்டுள்ள சங்கதிகளை படித்துப் பார்த்து கையொப்பம் செய்துள்ளேன். பிரமாண வாக்குமூலத்தை எனது முதல் விசாரணை வாக்குமூலமாக ஏற்றுக்கொள்ள பிராத்திக்கிறேன். நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை எனது தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

2. கடந்த 23.11.2005 ம் தேதியன்று அசல் வழக்கு எண்.03/1997 ல் முதுகுளத்தூர் மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணையின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.1 ஆகும்.

3. அசல் வழக்கு எண்.08/2004 வழக்கில் கடந்த 03.09.2010 ம் தேதியன்று முதுகுளத்தூர் மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணையின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.2 ஆகும்.

4. கடந்த 2010ம் ஆண்டு நான் பட்டா மாறுதல் உத்தரவு வழங்கக்கோரி கடலாடி வருவாய் வட்டாட்சியர் அவர்களிடம் கொடுத்த மனுவின் அலுவலக நகல் வா.சா.ஆ.3 ஆகும். (பிரதிவாதி தரப்பு ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது.

5. மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையால் W.P(.MD) No.13462 of 2011ல் கடந்த 25.11.2011ம் தேதியன்று பிறப்பிக்கப்பட்ட சான்றிட்ட நகல் வா.சா.ஆ.4 ஆகும்.

பிராதுபடி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

ஓம்/J.சங்கீதா
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
கடலாடி (மு.கூ.பொ)